# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021
# தேர்தல் நாள்: 06.04.2021

## மண்டல அலுவலர்களால் Candidate Set பணியின் போது செய்ய வேண்டியவை

## வாக்குப்பதிவு கருவி (Ballot Unit) தயார் செய்தல்:

1. வேட்பாளர் விவரங்கள் அடங்கிய Ballot Papper ஐ பொருத்துதல்
2. உபயோகப்படுத்தப்படும் Ballot unit எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இரண்டு Scrolling Switch களை 01, 02 என்றவாறு சரிசெய்தல்.
3. Ballot Paper ஐ BU வில்பொருத்திய பிறகு Ballot Paper Compartment ன் உட்புறம் Address Tag இடுதல்.
4. வேட்பாளர் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு நீல நிற பொத்தான்களை Mask செய்தல்.
5. Ballot Unit இன் வலதுபுற இரு முனைகளிலும் Address Tag இடுதல்.
6. Ballot Unit இன் அடிப்பகுதியில் Pink Paper Seal ஒட்டுதல்.

| Ballot Unit ல் கட்டப்படவேண்டிய Address Tagகளின் எண்ணிக்கை - 3 |
|---|

## வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு கருவி (Control Unit) தயார் செய்தல்

1. Control Unit ல் உள்ள பகுதிகள்
    1. Battery Section
    2. Candidate Set Section
    3. Result Section
    4. Display Section.

- Battery Section – ல் புதிய பாட்டரி பொருத்தி Address Tag இடவேண்டும்.

**VVPAT – M3**

1. **VVPAT-M3 –ல் மொத்தம் நான்கு பாகங்கள் உள்ளன.**

   - பாட்டரி பொருத்தும் பகுதி
   - வாக்குப்பதிவு கருவி (Ballot Unit) கேபிள் இணைக்கும் பகுதி
   - Papper Roll வைக்கும் பகுதி
   - வாக்குச்சீட்டு சேகரம் ஆகும் பகுதி (Ballot Slip Compartment)

## VVPAT – M3 (Voter Verifiable Paper Audit Trail) ஐ தயார் செய்தல்:

2. Paper Roll ஐ பொருத்துதல்

   - VVPAT ன் பின்புறப் பகுதியில் உள்ள கருப்பு நிற Papper Roll Knob ஐ செங்குத்தான நிலையில் Unlock Position ல் வைக்க வேண்டும்.
   - VVPAT ன் Paper Roll Compartment –ன் வெளிப்புற Door ஐ திறந்து புதிய Paper Roll உடன் கூடிய Spindle ஐ Paper Roll Compartment ல் கீழ்க்கண்ட படத்தில் உள்ள வாறு பொருத்துதல்.





- VVPAT ன் Paper Roll Compartment –ல் புதிய Paper Roll ஐ பொருத்திய பிறகு வெளிப்புற Door ஐ முறையாக மூடி இரண்டு Address Tag இடவேண்டும்.
- Battery ஐ VVPAT ன் பின்புறம் அதற்காக அமைக்கப்பட்டுள்ள Battery Compartment ல் உரிய முறையில் பொருத்துதல்.

3. Ballot Unit –ன் கேபிளை VVPAT ல் உள்ள BU Interface Section ல் கருப்பு மற்றும் சிவப்பு வண்ண பகுதிகள் பொருந்தும் வகையில் இணைக்க வேண்டும்.
4. VVPAT ன் கேபிளை Control Unit ன் பின்புறம் On Switch அருகில் உள்ள Plugin -ல் கருப்பு மற்றும் சிவப்பு வண்ண பகுதிகள் பொருந்தும் வகையில் இணைக்க வேண்டும்.

## <u>Candidate Set செய்வதற்கான நடைமுறைகள்:</u>

1. Control Unit ஐ Switch On செய்தவுடன் கீழ்க்கண்ட பகுதிகளை சரிபார்க்க வேண்டும்.
   - Control Unit ல் உள்ள Display Section ல் வரும் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.
   - CU -ன் இடது பச்சை விளக்கு எரிவதை சரிபார்க்க வேண்டும்.
   - VVPAT ன் முன்புறம் உள்ள பச்சை நிற LED Light எரிவதை சரிபார்க்க வேண்டும்.
   - BU ன் நீல நிற பொத்தான்களுக்கு அருகில் உள்ள சிவப்பு விளக்குகள் அனைத்தும் ஒருமுறை Blink ஆவதை சரிபார்க்க வேண்டும்.
   - VVPAT ல் Power On Self Test Report 7 Slip கள் Ballot Slips Compartment-ல் விழும்.
2. CU ல் Candidate Set செய்வதற்கு முன் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்

| Close | ⟶ | Result | ⟶ | Clear | ⟶ | Candidate Set |
|---|---|---|---|---|---|---|

3. பிறகு Candidate Set பொத்தானை அழுத்தி BU ன் கடைசி நீல நிற பொத்தானை அழுத்தி Candidate Set பணியினை முடிக்க வேண்டும்.

4. Candidate Set செய்த பிறகு Control Unit ல் உள்ள Candidate Section மற்றும் Battery Section ஆகிய இரண்டு பகுதிகளில் Address Tag இடவேண்டும்.
5. Candidate Set செய்யும் பொழுது கீழ்க்கண்ட இரண்டு Error ஏற்பட வாய்ப்பு உள்ளது.
   Link Error, Mismatch Error
6. பின்பு, Control Unit ஐ Switch Offசெய்ய வேண்டும். VVPAT ல் Paper Roll Knob ஐ படுக்கை வாட்டு நிலையில் Lock Position ல் வைக்க வேண்டும்.
7. EVM / VVPAT அனைத்து இணைப்புகளையும் துண்டிக்க வெண்டும்.
8. பிறகு மேற்கண்ட CU, BU & VVPAT கருவிகளை வாக்குச்சாவடிகளின் பெயர் மற்றும் எண் ஒட்டப்பட்ட அதற்குரிய பெட்டிகளில் வைக்க வேண்டும்.

<u>மாதிரி வாக்குப்பதிவு நடைமுறை</u>

1. தேர்தல் தினத்தன்று காலை 6.00 மணிக்கு மாதிரி வாக்குப்பதிவு நடத்திட வேண்டும்.
2. Ballot Unit ஐ ஒயரை VVPAT ல் உள்ள BU Interface Section ல் கருப்பு மற்றும் சிவப்பு வண்ண பகுதிகள் பொருந்தும் வகையில் இணைக்க வேண்டும்.
3. VVPAT ன் ஒயரை Control Unit ன் பின்புறம் On Switch அருகில் உள்ள Plugin -ல் கருப்பு மற்றும் சிவப்பு வண்ண பகுதிகள் பொருந்தும் வகையில் இணைக்க வேண்டும்.
4. VVPAT ன் பின்புறப் பகுதியில் உள்ள கருப்பு நிற Paper Roll Knob ஐ செங்குத்தான நிலையில் Unlock Position ல் வைக்க வேண்டும்.
5. வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாதிரி வாக்குப்பதிவிற்காக தயார் நிலையில் உள்ளது.
6. குறைந்தபட்சம் இரண்டு வேட்பாளர்களின் முகவர்கள் இருந்தாலே மாதிரி வாக்குப்பதிவை நடத்தலாம்.
7. வேட்பாளர்களின் முகவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வரவில்லையெனில் 15 நிமிடங்கள் வரை முகவர்களுக்காக காத்திருக்கலாம்.
8. 15 நிமிடங்களுக்கு மேற்பட்டு முகவர்கள் யாரும் வரவில்லை எனில் ஒரு வேட்பாளரின் முகவர் மட்டும் வந்திருந்தாலும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மாதிரி வாக்குப்பதிவை நடத்தலாம்.
9. வாக்குச் சாவடி முகவர்கள் யாரும் இல்லாத நிலையில் மாதிரி வாக்குப் பதிவை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் நடத்திடலாம். அது குறித்து பதிவுகள் செய்திட வேண்டும்.

10. Control Unit ஐ Switch On செய்யதவுடன் கீழ்க்கண்ட பகுதிகளை சரிபார்க்க வேண்டும்.
    - Control Unit ல் உள்ள Display Section ல் வரும் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.
    - CU -ன் இடது பச்சை விளக்கு எரிவதை சரிபார்க்க வேண்டும்.
    - VVPAT ன் முன்புறம் உள்ள பச்சை நிற LED Light எரிவதை சரிபார்க்க வேண்டும்.
    - BU ன் நீல நிற பொத்தான்களுக்கு அருகில் உள்ள சிவப்பு விளக்குகள் அனைத்தும் ஒருமுறை Blink ஆவதை சரிபார்க்க வேண்டும்.
    - VVPAT ல் Power On Self Test Report 7 Slip கள் Ballot Slips Compartment-ல் விழும்.

11. மாதிரி வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் முன்பு TOTAL பட்டனை அழுத்தி எந்த ஒரு வாக்கும் பதியப்படவில்லை என்பதனை முகவர்களிடம் உறுதிபடுத்தவும்.
12. மின்னணு கட்டுப்பாட்டுக் கருவியில் உள்ள வாக்களிக்கும் பொத்தானை (Ballot) அழுத்தி, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள ஏதேனும் ஒரு வேட்பாளருக்கு வாக்குப் பதியவும்.
13. வாக்களித்தவுடன் VVPAT கருவியானது மாதிரி வாக்குப்பதிவிற்காக வாக்களிக்கப்பட்ட வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய அச்சிட்ட தாளினை 7 விநாடிகளுக்கு பார்க்க அனுமதிக்கும்.
14. அதன் பின்னர், அந்த அச்சிடப்பட்ட தாளானது VVPAT ல் உள்ள Ballot Slip Compartment-ல் விழுந்து விடும். அதன் பிறகே Control Unit ல் உள்ள சிவப்பு நிற விளக்கு பீப் ஒலி எழுப்பி அணைந்துவிடும்.
15. இதே முறையைப் பின்பற்றி அப்போதுள்ள வாக்குசாவடி முகவர்கள் தோராயமாக அனைத்து வேட்பாளருக்கும் வாக்குகள் பதிவு செய்யலாம். (குறைந்தபட்சம் 50 பதிவுகள்.)
16. மாதிரி வாக்குப்பதிவில் NOTA விற்கும் வாக்குகள் பதிவுசெய்து காண்பிக்கப்பட வேண்டும்.
17. ஒவ்வொரு வேட்பாளருக்கும் எத்தனை ஓட்டுகள் பதிவுகள் செய்யப்பட்ட விவரத்தை வாக்குச்சாவடி அலுவலரும், முகவர்களும் குறித்துக் கொள்ள வேண்டும்.
18. மின்னணு கட்டுப்பாட்டு கருவியில் உள்ள நிறைவு (Close) பொத்தானை அழுத்தி மாதிரி வாக்குப்பதிவினை முடித்துக் கொள்ளுங்கள்.
19. நிறைவு (Close) பொத்தான் அழுத்தப்பட்ட பிறகு எந்த ஒரு ஓட்டும் பதிவு செய்ய முடியாது என்பதை காண்பிப்பதற்காக மின்னணு கட்டுப்பாட்டு கருவியில் உள்ள வாக்குச்சீட்டு (Ballot) பொத்தானை அழுத்தி முகவர்களிடம் காட்டி உறுதி செய்ய வேண்டும்.

20. தேர்வு முடிவு (Result) பொத்தானை அழுத்தி, மாதிரி ஓட்டளிப்பு சோதனையின் முடிவை காண்பித்து ஒவ்வொரு வேட்பாளருக்கும் எவ்வளவு வாக்குகள் பதிவானது என்ற விவரத்தை முகவர்களும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும் குறித்துக்கொண்டு சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.
21. மாதிரி வாக்களிப்பு சோதனையின் (Mock Poll), தேர்வு முடிவைப் பார்த்த பிறகு **CLEAR** பொத்தானை அழுத்தி இயந்திரத்தைச் சரி செய்து கொள்ளுங்கள். பின்னர் TOTAL பட்டனை அழுத்தி மொத்த ஓட்டுகள் ‘0’ (Zero) என்பதை முகவர்களிடம் காட்டி உறுதி செய்ய வேண்டும்.

Close → Result → Clear → Total

22. பின்னர் VVPAT ன் Ballot Slips Compartment ல் உள்ள VVPAT-இன் Power On Self Test Report Slipகளை தனியாக பிரித்து அவைகள் Not to be Counted என்ற விவரத்தை முகவர்களிடம் காண்பித்து தனியாக வைத்து விடவேண்டும்.
23. பிறகு வேட்பாளருக்கு பதிவான Ballot Slip களை மட்டும் எண்ணி Control Unit உடன் பதிவான வாக்குகளுடன் சரிபார்த்து உறுதி செய்துகொள்ள வேண்டும்.
24. மாதிரி வாக்குப்பதிவின் போது VVPAT ல் சேகரம் செய்யப்பட்ட Mock Poll Ballot Slip களின் பின்புறம் **Mock Poll Slip** என்கிற Rupper Stamp முத்திரை இட்டு அவற்றினை கருப்பு நிற தடிமனான உறையின் உள் வைத்து வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் முத்திரையினைக்கொண்டு சீலிடவேண்டும்.
25. அந்த உறையின் மீது வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் முகவர்கள் கண்டிப்பாக கையொப்பமிட வேண்டும்.
26. மேலும் அந்த உறையின் மீது வாக்குசாவடி எண், பெயர் மற்றும் சட்டமன்ற தொகுதி எண், பெயர் மற்றும் வாக்குப்பதிவு நாள் ஆகியவற்றை எழுத வேண்டும். மேலும் மேற்படி உறையின்மீது **“VVPAT Paper Slips of Mock Poll”** என்று கண்டிப்பாக எழுத வேண்டும்.
27. இந்த உறையினை இதற்காக வழங்கப்பட்ட பிரத்யேக பெட்டியில் உள் வைத்து மூடி அதற்காக வழங்கப்பட்ட Pink Paper Seal கொண்டு சுற்றி சீலிட்டு Presiding Officer மற்றும் Agent ஆகியோர் கையெழுத்திட வேண்டும்.
28. மேலும், மேற்படி பிரத்யேக Box -ன் மீது வாக்குச்சாவடி எண், பெயர் மற்றும் சட்டமன்ற தொகுதி எண், பெயர் மற்றும் வாக்குப்பதிவு நாள் ஆகியவற்றை எழுதி வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்ப இருக்கும் பொருட்களுடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

29. மாதிரி வாக்குப்பதிவு நடத்துவது தொடர்பாக MOCK POLL CERTIFICATE இரண்டு பிரதிகளில் தயார் செய்திட வேண்டும்.

30. MOCK POLL CERTIFICATE ன் ஒரு பிரதியை மண்டல அலுவலரிடம் முதல் சுற்றின் வருகையின் போதே அளித்திட வேண்டும். மற்றொரு பிரதியினை வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் மண்டல அலுவலரிடம் தேர்தல் பொருட்களுடன் சேர்த்து ஒப்படைக்க வேண்டும்.

## 31. CU ல் Green Paper Seal and Strip Seal பொருத்தும் முறை

- Result Section உள்ள உட்கதவு ஜன்னலை மறைக்கும் வகையில் பச்சை பேப்பர் சீலை செலுத்தும் பொழுது, Green Paper Seal ன் பச்சை நிறப்பகுதியும், எண்ணும் உங்களை நோக்கி இருக்கும் வகையில் வைத்து செலுத்த வேண்டும்.
- பச்சை பேப்பர் சீலை செலுத்திய பின்னர் தேர்வு முடிவுப் பட்டனுக்கு மேலுள்ள உட்கதவை மூட வேண்டும்.
- பிறகு தேர்வு முடிவுப் பகுதியின் உட்கதவை உறுதியான நூலால் பிணைத்து மூட வேண்டும்.
- சிறப்பு அட்டையைப் (Special Tag) பொருத்திப் பிணைத்த பின்னர், தேர்வு முடிவுப் பகுதியின் வெளிக் கதவை மூட வேண்டும். அப்பொழுது பச்சைத்தாள் முத்திரையின் வெளி விளிம்புகள், மூடப்பட்ட வெளிக்கதவின் ஓரங்களில் தெரியும் வகையில் மூடியிருக்க வேண்டும்.
- பிறகு முதன்மை வாக்குச்சாவடி அதிகாரி வெளிக்கதவை முகவரி அட்டையுடன் (Address Tag) சேர்த்து நூலால் கட்டி முத்திரையிட வேண்டும்.
- பச்சை பேப்பர் சீலை Strip Seal கொண்டு பின்வருமாறு சீலிடவேண்டும்.
- துண்டு முத்திரையின் (Strip Seal) உட்புறம் ஒரு மூலையில் A, B, என்று அடையாளமிடப்பட்டு பசை தடவப்பெற்ற இரு பகுதிகள் இருக்கும். உட்புறத்தின் அடுத்த மூலையில் D என்று அடையாளமிட்டு இரு சதுர அங்குலம் பசை தடவப்பட்ட பகுதி இருக்கும். துண்டுச்சீட்டின் வெளிப்புறத்தில் C என்று அடையாளமிடப்பட்ட பசை தடவப்பட்ட ஒரு பகுதி மட்டும் இருக்கும். துண்டு முத்திரைத்தாளின் உட்புற வெளிப்புறங்களைக் காட்டும் வரைபடம் கீழே உள்ளது.




(Pre-gummed Portions are shown in dark shade)

-

- வெளிப்புறத்திலிருந்து தேர்வு பகுதியை சீல் செய்ய Strip Seal ஐப் பொறுத்துவதற்கு முன்னர் முதன்மை அலுவலர் (Presiding Officer) பேப்பர் சீலில் உள்ள எண்ணிற்குக் கீழ், தனது முழுக் கையெழுத்திட வேண்டும். அங்குள்ள வேட்பாளர்களின் முகவர்கள் விரும்பினால் அவர்களின் கையெழுத்தினையும் இடச்செய்யலாம். முதன்மை அதிகாரி வாக்குச்சாவடி முகவர்கள் Strip Seal இல் இட்ட கையெழுத்தும், அவர்களின் நியமனக் கடிதத்தில் உள்ள கையெழுத்தும் சரிதானா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அடுத்து தேர்வு முடிவுப்பகுதியை (Result Section)முழுவதுமாக மூட கட்டுப்பாட்டு அலகைச் சுற்றி துண்டுத்தாள் முத்திரை (Strip Seal) யைப் பதிக்க வேண்டும். அப்பொழுதுதான் வாக்களிப்பு முடிந்த பின்னர் Strip Seal ஐச் சேதப்படுத்தாமல் இந்தப் பகுதியை இயக்க முடியாத நிலை அமையும்.

**Strip Seal-ஐ பொருத்தும் முறை விளக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**




2
Control Unit
On
E 698164
A
Total


3
On
E 698164
B
Total


4
On
E 698164
E 698164
C
Total


5
कन्ट्रोल युनिट
Control Unit
On
E 698164
E 698164
23AA 719355
Total







**<u>சுருக்கமாக நினைவில் கொள்ள:</u>**

1. **First Step – A ன் மேல் Green Paper Seal**
2. **Second Step - Green Paper Seal மேல் B**
3. **Third Step – C ன் மேல் Green Paper Seal**
4. **Fourth Step - Green Paper Seal மேல் D**

இம்முறையில் இயக்கினால் கதவின் இருபுறங்களிலும் நீட்டியிருக்கம் பச்சை பேப்பர் முத்திரையின் நான்கு மூலைகளும் Strip Seal -லினால் கெட்டியாக ஒட்டப்படும். அதே சமயம் தேர்வு முடிவுப்பகுதியின் (Result Section) வெளிக்கதவினை Strip Seal லைச் சேதப்படுத்தாமல் இனி இயக்க முடியாது.

32. **இத்துடன் மாதிரி வாக்குப்பதிவு முடிவுற்றது.**

33. மாதிரி வாக்குப்பதிவின் போது அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களும் பழுதின் காரணமாக மாற்றம் செய்யும் பொழுது மீண்டும் ஒருமுறை மாதிரி வாக்குப்பதிவு நடத்திக்காட்ட வேண்டும். அதில் NOTA உடன் சேர்த்து ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்கு மட்டும் பதிவு செய்தால் போதும்.

34. மாதிரி வாக்குப்பதிவின் போது VVPAT மட்டும் மாற்றம் செய்யப்படும் நேர்வுகளில் மீண்டும் ஒரு Mock Poll நடத்தத் தேவை இல்லை.

35. எந்தந்த தருணங்களில் EVM, BU மற்றும் VVPAT கருவிகள் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

    - CU -ல் **Link Error** என காண்பித்தால் அனைத்து இணைப்புகளையும் துண்டிக்காமல் ஆய்வு செய்த பிறகு சரி செய்ய முடியவில்லை என்றால் வாக்குப்பதிவு கருவி முழுவதும் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
    - **Control Unit or Ballot Unit** பழுதாக இருக்கும் நேர்வுகளில் வாக்குப்பதிவு கருவி முழுவதும் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

36. **CU திரையில் Error Code-1 அல்லது Low Battery என காண்பித்தால் CU ஐ Switch OFF செய்த பிறகே VVPAT ன் Battery மட்டும் மாற்றம் செய்யப்பட வேண்டும்.**

37. எந்தந்த தருணங்களில் VVPAT மட்டும் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

    - CU திரையில் **Error Code -2** அல்லது **Low Paper** என காண்பித்தால் VVPAT மாற்றம் செய்யப்பட வேண்டும்.
    - வாக்குச்சாவடி அலுவலர் CU-ல் Ballot பொத்தானை அழுத்தி வாக்காளர் வாக்களிக்க அனுமதித்தவுடன் வாக்களரும் வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளருக்கு எதிராக உள்ள நீல நிற பொத்தானை அழுத்திய பிறகு VVPAT ல் Ballot Slip அச்சிடப்படவில்லை என்று வாக்காளர் புகார் தெரிவிக்கும் பட்சத்தில் வாக்குப்பதிவு தலைமை அலுவலர் கீழ் குறிப்பிட்டுள்ள காரணிகளை கண்காணிக்க வேண்டும்.

        1. CU இல் Red Colour Busy Lamp ஒளிராமலும், CU Display Section ல் எந்தவொரு Message வராமலும் இருப்பின் வாக்காளரது கூற்று பொய்யானது என்று கூறி அனுப்பி விட வேண்டும்.

2. ஒருவேளை CU இன் சிவப்பு நிற Busy Lamp எரிந்து கொண்டிருந்து CU Display Section இல் Message எதுவும் வராமல் இருப்பின் வாக்காளரை மீண்டும் வாக்குப்பதிவு செய்ய அறிவுறுத்த வேண்டும்.

3. இவ்வாறு வாக்காளர் வாக்குப்பதிவு செய்த பிறகும் Ballot Slip அச்சிடப்படவில்லை எனில் VVPAT மாற்றம் செய்திட வேண்டும். மாற்றப்பட்ட VVPAT-ல் மேற்கண்ட வாக்காளரை வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

a) Ballot Slip அச்சடிக்கப்பட்டு ஆனால் Paper Cut ஆகாமல் தொங்கிக் கொண்டு உள்ளது என்று வாக்காளர் புகார் தெரிவிக்கும் பட்சத்தில் CU இன் சிவப்பு நிற Busy Lamp எரிந்து கொண்டிருந்து CU Display Section இல் Message எதுவும் வராமல் இருப்பின் VVPAT மாற்றம் செய்திட வேண்டும். மாற்றப்பட்ட VVPAT-ல் மேற்கண்ட வாக்காளரை வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

**EVM மற்றும் VVPAT மாற்றம் செய்ய வேண்டிய நேர்வுகளில் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் உடனடியாக மண்டல அலுவலரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்**

## தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் –2021 நடைபெறும்போது கோவிட்–19 தொடர்பாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் விபரங்கள்

1. வாக்களிக்கும் வரும் அனைத்து வாக்காளர்கள், வாக்கு சாவடி தேர்தல் அலுவலர்கள், வாக்கு சாவடி முகவர்கள், புகைப்பட நிபுணர்கள் ஆகியோர் கண்டிப்பாக முககவசம் அணிந்து இருக்க வேண்டும்.

2. அனைத்து வாக்கு சாவடி மையங்களிலும் கிருமி நாசினி (Sanitizer) வைத்திருக்க வேண்டும்.

3. அனைத்து வாக்காளர்களையும் வெப்பமானியை கொண்டு உடல் வெப்பநிலை ஆய்வு செய்யும்பொழுது, குறிப்பிட்ட வரையறை அளவுக்கு மேல் வெப்ப அளவு கண்டறியப்பட்டால் அந்த வாக்காளர்களுக்கு Token வழங்கி வாக்குப்பதிவு முடிவடையும் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக வாக்களிக்க அறிவுறுத்த வேண்டும். அந்த ஆய்வின்போது சுகாதார ஆய்வாளர் ஒருவர் நியமனம் செய்து வைத்திருக்க வேண்டும்.

4. அனைத்து வாக்காளர்களும் கண்டிப்பாக சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். அதற்கேற்றவாறு வாக்காளர்கள் வரிசையில் நிற்க ஏதுவாக 6 மீட்டர் இடைவெளியில் வட்டங்கள் வரையப்படவேண்டும். குறைந்த பட்சம் 20 நபர்கள் வரிசையில் நிற்கும் வகையிலும், மற்ற வாக்காளர்கள் நிழலான பகுதியில் அமரும் வகையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. வாக்குப் பதிவிற்கு முதல் நாளன்று வாக்குச் சாவடியை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும்.

6. அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் Help Desk வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

7. அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் முகக்கவசங்கள் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

8. கோவிட் –19 தொடர்பான விழிப்புணர்வு போஸ்டர்கள் அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் ஒட்டியிருக்க வேண்டும்.

9. வாக்குச் சாவடி மையங்களில் உள்ள வாக்குச்சாவடி முகவர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் எவருக்கேனும் காய்ச்சல் மற்றும் வேறு அறிகுறிகள் தென்பட்டால் உடன் அவருக்கு பதில் மாற்று அலுவலரை நியமிக்க வேண்டும்.

10. அனைத்து வாக்காளர்களுக்கும் கையுறை வழங்கப்பட வேண்டும்.

11. உபயோகப்படுத்தப்பட்ட கையுறை மற்றும் முகக்கவசங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் தேவையான துப்புறவு பணியாளர்களை பணியமர்த்தப்பட வேண்டும்.

13. கோவிட்–19 ஆல் பாதிக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் வசிக்கும் வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக தனி நடைமுறைகள் ஏற்படுத்தப்படும்.

**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் –2021**

**தேர்தல் பார்வையாளரால் Scrutiny செய்யும்போது எடுத்துக்கொள்ளப்படும் ஆவணங்கள்**

1. வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவின்போது ஏதேனும் வாக்குப்பதிவு முறைகேடுகள் நடைபெற்றதாக தேர்தல் பார்வையாளருக்கோ, மாவட்ட தேர்தல் அலுவலருக்கோ மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலருக்கோ புகார்கள் ஏதும் வரப்பெற்றபின் அந்த வாக்குச்சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள்.
2. வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவின்போது வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டு வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டது தொடர்பாக தேர்தல் பார்வையாளருக்கோ, மாவட்ட தேர்தல் அலுவலருக்கோ மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலருக்கோ புகார்கள் ஏதும் வரப்பெற்றபின் அந்த வாக்குச்சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள்.
3. வாக்குச்சாவடிகளில் வாக்குச்சாவடி முகவர்கள் இல்லாமல் வாக்குப்பதிவு நடந்தாலும் அல்லது ஒரே ஒரு வேட்பாளரின் வாக்குச்சாவடி முகவர் மட்டும் இருந்து வாக்குப்பதிவு நடந்தாலும் அந்த வாக்குச் சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள் தேர்தல் பார்வையாளரால் சரிபார்க்க எடுத்துக்கொள்ளப்படும்.
4. வாக்குப்பதிவின்போது வாக்காளர் தனது அடையாள அட்டை உறுதிபடுத்திக்கொள்ள தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட ஆவணங்களில் வாக்காளர் அடையாள அட்டை தவிர இதர ஆவணங்களைக்கொண்டு வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது அந்த வாக்குச்சாவடியில் பதிவான மொத்த வாக்குகளில் 25 சதவீதத்திற்கு அதிகமாக இருப்பின் அந்த வாக்குச் சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள் தேர்தல் பார்வையாளரால் சரிபார்க்க எடுத்துக்கொள்ளப்படும்.
5. வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ASD (Absent Shift Death List) பட்டியலில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்கு அதிகமான வாக்களர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அந்த வாக்குச்சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள் தேர்தல் பார்வையாளரால் சரிபார்க்க எடுத்துக்கொள்ளப்படும்.
6. ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திலும் பதிவான வாக்கு எண்ணிக்கையின் சதவீதமானது, இதற்கு முன்பு நடைபெற்ற நாடாளுமன்ற / சட்டமன்ற தேர்தலின்போது பதிவான மொத்த வாக்குப்பதிவு சதவீதத்தைவிட 15% அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பதிவாகி இருப்பின் அந்த வாக்குச்சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள் தேர்தல் பார்வையாளரால் சரிபார்க்க எடுத்துக்கொள்ளப்படும்.
7. எந்தவொரு வாக்குச்சாவடியில் Tendered Votes and Challenged Votes 5 எண்ணிக்கைக்கு மேல் பதிவாகி இருப்பின் அந்த வாக்குச்சாவடியின் வாக்குப்பதிவு விவரங்கள் தேர்தல் பார்வையாளரால் சரிபார்க்க எடுத்துக்கொள்ளப்படும்.

# Scrutiny of 17A Register at the time of Observer's Scrutiny

| S.No. | Item | |
|---|---|---|
| 1. | Total Elector in the P.S. | Male |
| | | Female |
| | | Other |
| | | Total |
| 2. | Number of persons who voted in the P.S. | Male |
| | | Female |
| | | Other |
| | | Total |
| 3. | Number of Tendered votes | |
| 4. | Number of challenged votes | |
| 5. | Number of Proxy votes by CSV | |
| 6. | Number of blind / infirm voters who exercised their right of vote with the help of companion | |
| 7. | Number of electors who exercised their right of vote on the basis of EPIC | |
| 8. | Photo Voter Slips shall not be accepted as stand alone identification document for voting | |
| 9. | Number of electors who exercised their right of vote on the basis of alternative document | |
| 10. | Number of electors after signing in Form-17A (Left without voting( (Rule 49 'O') | |
| 11. | Number of polling agents in the polling station | |
| 12. | Number of polling stations where no polling agent or only one polling agent was present | |
| 13. | Number of overseas electors who voted in the poll. | |
| 14. | Number of EVMs and VVPATs used | |
| 15. | Whether the EVM and VVPAT was changed or replaced | |
| 16. | If so the time when changed and what was the reason for it. | |
| 17. | Total ASD voters in the list. | |
| 18. | Total persons who cast their votes from the ASD voters list. | |
| 19. | Any incident of violence or poll interruption due to any reason. | |
| 20. | Complaints received with respect to that polling station. | |

## அஞ்சல் வாக்குச்சீட்டுகள் (Postal Ballot Papers)

1. Service Voters
2. Electors subjected to preventive – Detention
3. Voters on Election Duty
4. The person aged above 80
5. The person with PWD
6. The person effected with COVID-19
7. The person on essential category
8. Special Voters
9. Notified Voters

**Senior citizens- Absentee Voters Category**

1. 80 –வயதுக்கு மேற்பட்ட வயதான வாக்காளர்கள் (AVSC)
2. மாற்றுத்திறனாளி வாக்காளர்கள்(AVPD)
3. கோவிட்–19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள்/ தொற்று உள்ளதாக சந்தேகப்படுபவர்கள் (AVCO)

மேற்கண்ட வாக்காளர்களில் அஞ்சல் வாக்கு மூலம் வாக்களிக்க விரும்புபவர்கள் படிவம் 12D மூலம் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட ஐந்து தினங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் கீழ் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

1. அஞ்சல் வாக்குச்சீட்டு கோரும் படிவம் 12D மேற்குறிப்பிட்டுள்ள வாக்காளர்களுக்கு விநியோகம் செய்தல்.

   (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் உள்ள 80 – வயதுக்கு மேற்பட்ட வயதான வாக்காளர்கள்/ மாற்றுத்திறனாளிகள்/ கோவிட்–19 தொற்றினால் பாதிப்பு அடைந்தவர்கள் வாக்குச்சாவடி வாரியான பட்டியலினை தயார் செய்ய வேண்டும்.

   (ஆ) வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து மேற்படி பட்டியலினை பெற்று அப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள வாக்காளரிடம் நேரடியாக சென்று படிவம் 12 D யினை வாக்காளரிடம் வழங்கிவிட்டு வாக்காளர்கள் படிவங்களை பெற்றுக்கொண்டதற்கு ஒப்புதலை பெறவேண்டும். மேற்படி ஒப்புதலை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

   (இ) வாக்குச்சாவடி நிலை அலுவலர் சம்மந்தப்பட்ட வாக்காளர் வீட்டிற்கு செல்லும்பொழுது வாக்காளர் இல்லை எனில் BLO தனது அலைபேசி எண்

விவரங்களை அந்த இல்லத்தில் உள்ளவரிடம் தெரிவித்து மீண்டும் இல்லத்திற்கு சென்று படிவம் 12 D யினை வாக்காளரிடம் வழங்கி ஒப்புதல் பெற வேண்டும்.

(ஈ) மேற்படி வாக்காளர்கள் அஞ்சல் வாக்கு மூலம் வாக்கு செலுத்த விருப்பமுள்ள வாக்காளர்கள் படிவம் 12 D யினை பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட BLO விடம் தேர்தல் அறிவிக்கை அறிவிக்கப்பட்ட ஐந்து நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை BLO தேர்தல் நடத்தும் அலுவங்களில் ஒப்படைக்க வேண்டும்.

(ஈ) தேர்தல் நடத்தும் அலுவலர் பூர்த்திசெய்யப்பட்ட படிவம் 12 D யினை BLO விடமிருந்து பெற்றவுடன் அஞ்சல் வாக்கு மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்து படிவம் 12 D மூலம் விண்ணப்பித்துள்ள வாக்காளர்களை வகைவாரியாக (AVSC, AVPD, AVCO) தனித்தனியாக பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

(உ) தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பு மனுத்தாக்கல் முடிவடையும் நாளன்று இறுதியாக வெளியிடப்படும் வாக்காளர்களை அடிப்படையாக கொண்டு BLO இடமிருந்து பெறப்பட்ட படிவம்–12(D) (அஞ்சல் வாக்குச்சீட்டுகள்) தயார் செய்திட வேண்டும்.

(ஊ) படிவம்–12(D) மூலம் அஞ்சல் வாக்குச்சீட்டு கோரி விண்ணப்பித்த விவரங்களை அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு வழங்க வேண்டும்.

<u>அஞ்சல் வாக்குச்சீட்டு வழங்கி திரும்பப் பெறுதல்</u>

1. இரண்டு அலுவலர்களை கொண்ட குறைந்தபட்சம் வாக்குப்பதிவு அலுவலர் நிலையில் குழுக்கள் நியமிக்க வேண்டும். மேற்படி குழுக்கள் மூலமே படிவம்–12(D) அஞ்சல் வாக்குச்சீட்டு கோரி விண்ணப்பித்த வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுகள் அளித்திட வேண்டும்.
2. சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு முன்கூட்டியே அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம் செய்யப்படுவதை ளுஆளு மூலம் அனுப்ப வேண்டும். அலைபேசி வசதி இல்லாத வாக்காளர்களுக்கு தபால் அல்லது BLO மூலம் விவரம் தெரிவிக்க வேண்டும்.
3. அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம் செய்யும் குழுக்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர் வீட்டுக்கு செல்லும்போது வாக்காளர்கள் இல்லையெனில் இரண்டாவது முறை செல்லலாம். இரண்டாவது முறை செல்லும்போது வாக்காளர் இல்லையெனில் திரும்ப செல்ல தேவையில்லை.
4. அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம் செய்யும் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வாக்காளரின் அடையாள அட்டையினை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், வாக்காளரின் பெயர் மற்றும் விவரங்களை உரிய பதிவேட்டில் பதிவு செய்து

வாக்காளரின் கையெழுத்து / கைரேகையினை அப்பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு அஞ்சல் வாக்குச்சீட்டினை வாக்காளர்களுக்கு அளிக்க வேண்டும்.

5. மேலும், AVSC, AVPD, AVCO பட்டியலில் அஞ்சல் வாக்குச்சீட்டு பெற்ற வாக்காளரின் பெயருக்கெதிரே டிக்() செய்திட வேண்டும். இந்நிகழ்வுகள் அனைத்தும் வீடியோ மூலம் பதிவு செய்யப்பட வேண்டும்.
6. மேற்படி அஞ்சல் வாக்குச்சீட்டினை அவரது விருப்பத்திற்கு ஏற்ற வேட்பாளருக்கு டிக் செய்து உறை 13B–ல் வைத்திட வேண்டும்.
7. படிவம் 13 A –ல் உறுதிமொழி சான்று வாக்குப்பதிவு அலுவலரின் சான்றொப்ப கையொப்பம் பெற வேண்டும்.
8. படிவம் 13 A மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டு அடங்கிய உறை 13B ஆகிய இரண்டையும் உறை 13C–ல் வைத்து வாக்குப்பதிவு செய்யும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறாக பெறப்படும் அஞ்சல் வாக்குச்சீட்டு உறைகளை அதற்கென வழங்கப்பட்டுள்ள Big Canvas Bag–ல் வைத்து இதற்கென நியமனம் செய்யப்பட்டுள்ள உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.
9. மேற்படி அஞ்சல் வாக்குச்சீட்டு பெறும் நடைமுறைகள் தேர்தல் நாளுக்கு முந்தைய நாள் வரை நடைமுறைப்படுத்தப்படும்.
10. இந்நடைமுறைகளை சிறப்பாக நடத்தி முடித்திட குழுவினருடன் காவல்துறை பணியாளர் மற்றும் வீடியோகிராபர் உடன் செல்ல வேண்டும்.

இப்பணிகள் அனைத்தும் மண்டல அலுவலர்களால் கண்காணிக்கப்பட வேண்டும்.

**Proposed schedule for Training of polling personnel**

| S.No. | Training | Guidelines of ECI | Probable date that can be fixed by DEO | Probable date for Training |
|---|---|---|---|---|
| **1** | **1st Training** (separately for each category Pro, PO1,PO2,PO3,PO4) | 3 days after First randomization (First randomization 3-4 days after date of notification) | On or before 18.03.2021 (Thursday) | |
| **2** | **2nd Training** (for the Team together Pro+PO1+PO2+PO3+PO4) | 2 days after second randomization (Second randomization– 9 to12 days before date of poll and after postal ballots are finalized) | 26.03.2021 (Friday) | |
| **3** | **2nd Training** (same as 2nd Training ) | 3 days before poll date | 03.04.2021 (Saturday) | |
| **4** | **3rd Training** | P-1 Day | 05.04.2021 (Monday) | |

**<u>தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அஞ்சல் வாக்குப்பதிவு நடைமுறைகள்</u>**

1. வேறு சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் அஞ்சல் வாக்குச்சீட்டு பெறுவதற்கு படிவம்–12 பெற வேண்டும்.
2. அதே சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் அஞ்சல் வாக்குச்சீட்டு பெறுவதற்கு படிவம்–12A பெற வேண்டும்.
3. **படிவம்–12B -** பணியாளர்களுக்கு வழங்கப்படும் தேர்தல் பணிச்சான்று.
4. **படிவம்–13A –** அஞ்சல் வாக்குப்பதிவு செய்யும் வாக்காளர் அளிக்கும் உறுதிமொழியினை Gajetted Officer நிலைக்குக் குறையாத அலுவலர் சான்றொப்பத்துடன் அளிக்க வேண்டும்.
5. **உறை–13B (Cover) -** அஞ்சல் வாக்குச்சீட்டினை வைக்கும் உறை
6. **உறை–13C (Cover) -** உறுதிமொழி படிவம் மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டு வைத்துள்ள உறை 13B ஆகியவற்றுடன் வைத்து தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பும் முறை.
7. **உறை–13D (Cover) –** அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவுரை
8. **உறை–13F (Cover) –** படைக்கல பணியாளர் பதிலி நியமனம் செய்வது (Proxy)
9. **உறை–13G (Cover) –** நியமனம் செய்யப்பட்ட பதிலி நீக்கம் செய்தல், வேறு பதிலி நியமனம் செய்தல்